# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2466 - 2025 දෙසැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2025.12.05

2466 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82741- 403 (2025/12)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (திணைக்களம் சார்) சேவைகள் வகுதியின் பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு – 2025

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (திணைக்களம் சார்) சேவைகள் வகுதியின் (MN - 3 - 2025) பின்வரும் பதவிகளின் பொருட்டு அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிகளின் படி திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பங்கள் கோரும் கடைசித் திகதிக்கு, அதாவது 2025.12.19 ஆந் திகதிக்கு கீழே உள்ள 3.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1.1 **ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 01. | பூச்சியியல் உதவியாளர் | 01 |
| 02. | விலங்கியல் உதவியாளர் | 01 |
| 03. | தாவரவியல் உதவியாளர் | 01 |
| 04. | புவியியல் உதவியாளர் | 01 |
| 05. | தேசிய நூதனசாலைகள் காப்பாளர் (Curator) | 06 |
| 06. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (திட்டமிடல்) | 02 |
| 07. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) | 01 |
| 08. | கட்புல அலகிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் | 01 |

1.2 **பதவிகளின் கடமைகளின் தன்மை:**

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| பூச்சியியல் உதவியாளர் | பூச்சியியல் பிரிவுக்குரிய பொருட்கள் மற்றும் மாதிரிகளை ஆவணப்படுத்திப் பேணுதல் மற்றும் அப் பொருட்களின் பாதுகாப்புத் தொடர்பாகப் பூச்சியியல் உதவி பணிப்பாளருக்குப் பொறுப்புக் கூறல் |
| விலங்கியல் உதவியாளர் | விலங்கியல் பிரிவுக்குரிய பொருட்கள் மற்றும் மாதிரிகளை ஆவணப்படுத்திப் பேணுதல் மற்றும் அப் பொருட்களின் பாதுகாப்புத் தொடர்பாக விலங்கியல் பிரதிப் பணிப்பாளருக்குப் பொறுப்புக் கூறல் |
| தாவரவியல் உதவியாளர் | தாவரவியல் பிரிவுக்குரிய பொருட்கள் மற்றும் மாதிரிகளை ஆவணப்படுத்திப் பேணுதல் மற்றும் அப் பொருட்களின் பாதுகாப்புத் தொடர்பாக தாவரவியல் உதவிப் பணிப்பாளருக்குப் பொறுப்புக் கூறல் |
| புவியியல் உதவியாளர் | புவியியல் பிரிவுக்குரிய பொருட்கள் மற்றும் மாதிரிகளை ஆவணப்படுத்திப் பேணுதல் மற்றும் அப் பொருட்களின் பாதுகாப்புத் தொடர்பாக புவியியல் உதவிப் பணிப்பாளருக்குப் பொறுப்புக் கூறல் |
| நூதனசாலைகள் காப்பாளர் (Curator) | நூதனசாலையின் மற்றும் அதற்குரிய அதன் வளாகத்திலும் உள்ள அசையா மற்றும் அசையும் சொத்துக்களின் பாதுகாப்பின் பொருட்டு நூதனசாலைகள் தலைவர்களுக்கு ஒத்துழைத்தல் |

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (திட்டமிடல்) | நூதனசாலைகள் திணைக்களத்தின் மற்றும் நூதனசாலைகள் கட்டடங்களின் நிர்மாணம், திருத்தவேலைகள் போன்று கண்காட்சிகளின் நிர்மாணங்களின் பொருட்டு மதிப்பீடுகள், விவரக்குறிப்புகள் மற்றும் அளவைப் பத்திரங்கள் தயாரிக்கும் பொருட்டு நூதனசாலைகள் தலைவர்களுக்கு ஒத்துழைத்தல், வேலைகளைப் பரிசீலனை செய்தல் மற்றும மேற்பார்வை, வேலைத் தளக் கட்டுப்பாடு மற்றும் சேவைகள் பராமரிப்பு |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) | நூதனசாலைகள் திணைக்களத்தின் மற்றும் நூதனசாலைகளின் மின் பராமரிப்பின் பொருட்டு நூதனசாலைகள் தலைவர்களுக்கு ஒத்துழைத்தல், மின் தொழில்நுட்ப பணிகளை மேற்பார்வை. கேட்போர் கூடத்தில் மைக்ரோஃபிலிம் (Micro film) மற்றும் CCTV அமைப்பில் கோளாறு ஏற்படும் போது, அவற்றைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல். திணைக்களத் தலைவரால் கையளிக்கப்படும் வேறு கடமைகள். |
| கட்புல அலகிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பொறுப்பான பொறுப்பாளர் | நூதனசாலையின் மாநாட்டு மண்டபம் மற்றும் கேட்போர் கூடத்தின் பொறுப்புக்கள் போன்று அதற்குச் சொந்தமான சகல பொருட்களுக்கும் பொறுப்பாக இருத்தல் மற்றும் பராமரித்தல். மகாநாட்டு மண்டபம் மற்றும் அவற்றைப் பராமரித்தல். மகாநாட்டு மண்டபம் மற்றும் கேட்போர் கூடத்தில் உள்ள ஆடியோ-விஷுவல் உபகரணங்களை இயக்குதல். ஒலிப் பதிவு செய்தல், வெளிக்களத்தில் பதிவு செய்யும் பொருட்டு கணினிகளைப் பயன்படுத்தி ஒலியைச் செயலாக்குதல். (Digital Sound) |

**2.0 சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை:**

எழுத்து மூலமான பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்

2.1 3.0 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் எழுத்து மூலமான பரீட்சைக்கு அழைப்பு விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2 நூதனசாலையின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைச் சபையினால் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை அடைப்படையின் தொடர் முறைக்கமைய ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**3.0 தகைமைகள் :**

**3.1 கல்வித் தகைமைகள் :**

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| பூச்சியியல் உதவியாளர் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் உயிரியல் பாடம் உட்பட உயிரியல் பாடத்திட்டத்திற்குரிய இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ( பழைய பாடத்திட்டத்தில் விலங்கியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்) |

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| விலங்கியல் உதவியாளர் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் உயிரியல் பாடம் உட்பட உயிரியல் பாடத்திட்டத்திற்குரிய இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ( பழைய பாடத்திட்டத்தில் விலங்கியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்) |
| தாவரவியல் உதவியாளர் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் உயிரியல் பாடம் உட்பட உயிரியல் பாடத்திற்குரிய இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ( பழைய பாடத்திட்டத்தில் தாவரவியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்) |
| புவியியல் உதவியாளர் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் உயிரியல் பாடம் உட்பட உயிரியல் பாடத்திட்டத்திற்குரிய இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ( பழைய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்) |
| நூதனசாலைகள் காப்பாளர் (Curator) | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் உயிரியல் பாடம் உட்பட உயிரியல் பாடத்திட்டத்திற்குரிய இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் கலைப் பிரிவில் வரலாறு பாடம் உட்பட இரண்டு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.<br>(பழைய பாடத்திட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்) |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (திட்டமிடல்) | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் பிரயோகக் கணிதம், தூய கணிதம், இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம்/கணித பாடத்திற்குரிய இரண்டு பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.<br>(பழைய பாடத்திட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உட்பட, மூன்று பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.) |

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் பிரயோகக் கணிதம், தூய கணிதம், இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம்/கணித பாடத்திற்குரிய இரண்டு பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.<br>(பழைய பாடத்திட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உட்பட, மூன்று பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.) |
| கட்புல அலகிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் | சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம் ) பரீட்சையில் பிரயோகக் கணிதம், தூய கணிதம், இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம்/கணித பாடத்திற்குரிய இரண்டு பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.<br>(பழைய பாடத்திட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் உட்பட, மூன்று பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.) |

3.2 **தொழில்சார் தகைமைகள்:**

| *பதவி* | *தகைமைகள்* |
|---|---|
| பூச்சியியல் உதவியாளர் | அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) பாடநெறியை பின்பற்றியிருத்தல் |
| விலங்கியல் உதவியாளர் | அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) பாடநெறியை பின்பற்றியிருத்தல் |
| தாவரவியல் உதவியாளர் | அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) பாடநெறியை பின்பற்றியிருத்தல் |
| புவியியல் உதவியாளர் | மொரட்டுவ பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் புவியியல் அல்லது இரத்தினவியலில் டிப்ளோமா. |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (திட்டமிடல்) | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழிற் கல்வி தகைமை ( NVQ) ஆகக் குறைந்தது ஐந்தாவது மட்டத்திற்குக் குறையாத சிவில் பொறியியல் மற்றும் கட்டட நிர்மான தொழில் நுட்பம் தொடர்பாக தகைமையைப் பெற்றிருத்தல் அல்லது<br>மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் (சிவில் இன்ஜினியரிங்) டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றியிருத்தல்<br>கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் (சிவில் இன்ஜினியரிங்) டிப்ளோமா அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது இலங்கை பொறியாளர்கள் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் 1 வது பகுதியை (சிவில் இன்ஜினியரிங்) வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கலந்தாலோசித்து கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் |

| *பதவி* | *தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் நிர்ணயிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழிற் கல்வித் தகைமையில் (NVQ) ஆகக் குறைந்தது ஐந்தாவது மட்டத்திற்குக் குறையாத மின் பொறியியல் பாடம் தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் |
| கட்புல அலகிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தொடர்புடைய துறையில் டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றியிருத்தல் |

3.3 **உடல் தகைமைகள்:**

சகல விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, போதுமானளவிலான உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

3.5 **ஏனைய தகைமைகள்:**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
III. சேவைக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டான எழுத்து மூலப் பரீட்சைக்கு மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் பொருட்டு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது, விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகள் மற்றும் விதித்துரைக்கப்பட்டுள்ள வயது எல்லை என்பன விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகையிலும் பூரணப்படுத்தியிருந்தால் மட்டுமேயாகும்.

4.0 **வயது** :

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஆகக் குறைந்தது 18 வயதுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன், ஆகக் கூடிய வயது 30 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5.0 **சேவையில் சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

5.1 இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ விதவைகள் தாபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். இருப்பினும், அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் உட்படல் வேண்டும்.

5.2 இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

5.3 III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையதல் வேண்டும்.

5.4 அரச கரும மொழிக் கொள்கைக்குரிய 16.10.2020 ஆந் திகதிய 18/2020 என்னும் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய, அரச கரும மொழித் தேர்ச்சியை விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.5 அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

6.0 **சம்பளத் தொகை :**

இப் பதவியின் பொருட்டு, பொது நிர்வாகச் 10/2025, என்னும் இலக்கமுடைய சுற்றறிக்கையில் MN- 3-2025 இன் படி, ரூபா 52,250 – 10 x 800 - 11 x 1, 190 – 10 x 1320 – 10 x 1350 – 100,040 (மாதாந்தம்) சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும்.

இச்சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் ஏற்பாடுகளின் படி, நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

7.0 **ஆட்சேர்ப்பு முறை : எழுத்து மூலப் பரீட்சையில் மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் மூலம்.**

பரீட்சை நடைமுறை விதி: பரீட்சை இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்து மூலமான பரீட்சையாகும். இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன், விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | | *கிடைக்கக் கூடிய மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையும் பொருட்டு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* | *காலம்* |
|---|---|---|---|---|
| I. | நுண்ணறிவு சோதனை | 100 | 40% | 01 மணித்தியாலம் |
| II. | பாடம் சார்ந்த தொழில்நுட்பத் தேர்வு | 100 | 40% | 01 மணித்தியாலம் |

7.1 **பாடத்திட்டம்:**

I. நுண்ணறிவுத் தேர்வு: பரீட்சார்த்தியின் பகுத்தறிவு, பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் திறன்களை சோதிக்கும் பொருட்டான 40 கேள்விகளைக் கொண்டதாகும்.

II. பாடம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை: 15 பொது அறிவு வினாக்கள் மற்றும் ஒவ்வொரு பதவிக்கும் உரிய துறைகளுடன் தொடர்புடைய பொருத்தமான பகுதிகளிலிருந்து 25 வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரமாகும். பாடங்களுக்குரியதான பகுதிகள் பின்வருமாறு.

1. பூச்சியியல் உதவியாளர்:

Phylum-Arthropoda (ஃபைலம்-ஆர்த்ரோபோடாவின்) Class-Insect தொடர்பான புரிந்துணர்வு, ஆய்வு கூட உபகரணங்களின் பாவனை தொடர்பான புரிந்துணர்வு மற்றும் சூழலியல் பற்றிய அடிப்படை அறிவைப் பரிசோதித்தல்.

2. விலங்கியல் உதவியாளர்:

Phylum-Arthropoda (ஃபைலம்-ஆர்த்ரோபோடாவின்) Class-Insect தொடர்பான புரிந்துணர்வு, ஆய்வு கூட உபகரணங்களின் பாவனை தொடர்பான புரிந்துணர்வு மற்றும் சூழலியல் பற்றிய அடிப்படை அறிவைப் பரிசோதித்தல்.

3. தாவரவியல் உதவியாளர்:

தாவர இராச்சியம் தொடர்பான புரிந்துணர்வு, ஆய்வு கூட உபகரணங்களின் பாவனை தொடர்பான புரிந்துணர்வு மற்றும் சூழலியல் பற்றிய அடிப்படை அறிவைப் பரிசோதித்தல்.

4. புவியியல் உதவியாளர்:

புவியியல் மற்றும் தொல்லுயிரியல் தொடர்பான அறிவைப் பரிசோதித்தல்.

5. நூதனசாலைகள் காப்பாளர் (Curator):

விஞ்ஞானப் பிரிவு: விலங்கியல் மற்றும் தாவரவியல் பற்றிய அடிப்படை அறிவு.

கலாச்சாரப் பிரிவு : இலங்கையின் கலாசார கூறுகள், மரபுகள் மற்றும் வரலாறுகள் பற்றிய அடிப்படை அறிவு.

6. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (திட்டமிடல்):

சிவில் இன்ஜினியரிங், கட்டிட நிர்மாணத் தொழில் நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் உபகரணங்கள் மற்றும் உரிய தொழில்நுட்ப முறை தொடர்பான அறிவைப் பரிசோதித்தல்.

7. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) :

சிவில் இன்ஜினியரிங், கட்டிட நிர்மாணத் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் உபகரணங்கள் மற்றும் உரிய தொழில்நுட்ப முறை தொடர்பான அறிவைப் பரிசோதித்தல்.

8. கட்புல அலகிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

ஆடியோ விஷுவல் உபகரணங்களை இயக்குவதற்கும், ஒலிப்பதிவகத்தில் ஒலிப்பதிவு செய்வதற்கும், வெளிக்களத்தில் பதிவு செய்யும் பொருட்டு கணினி அடிப்படையிலான ஒலி செயலாக்கம் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் உபகரணங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்ப முறை தொடர்பான அறிவைப் பரிசோதித்தல்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தொடர்புடைய சேவைகள் வகுதியின் (MN-3-2025) பதவிகளின் பொருட்டான பொதுவான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. கல்வி மற்றும் உடல் ஆரோக்கியம் தொடர்பான தகுதி பரிசோதனை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படும்.

** குறிப்பு :

பொதுவான நேர்முகப் பரீட்சைக்குக் கலந்து கொள்ளல் நியமனம் வழங்குவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருத்திற் கொள்ளப்படாது.

**8.0 விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, 21x 29 செ.மீ (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, தாமாகவே விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்.

8.2 விதித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்காத மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாதுள்ள மற்றும் முழுமையற்ற நிலையில் உள்ள விண்ணப்பங்கள் எவ்விதமான அறிவித்தல்களும் இல்லாது நிராகரிக்கப்படும்.

8.3 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதாக அறிவிக் கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் குறித்து விடுக்கப்படும் எவ்வித மான முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.4 நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைப்பு விடுக்கப்படுவது, விண்ணப்பதாரர் இப் பதவியின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.5 விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவிக்கமையத் "தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (திணைக்களம் சார்) சேவைகள் வகுதியின் ………… பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2025 எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.6 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 06/2006 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் தரப்படுத்தலின் படி, மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தின் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.7 இவ்வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தானதாகும்.

**9.0 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025.12.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,
இலக்கம். 53,
சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு - 07.

**10.0 நேர்முகப் பரீட்சையின் பொருட்டு தோற்றுதல் :**

எழுத்து மூலம் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை தொடர் அடிப்படைக்கமைய ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சம்மான எண்ணிக்கையினர் பொது நேர்முகப்பரீட்சைக்கு நடைபெறும் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

அழைப்புக் கடிதத்தைச் சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்திக்கும் திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழக்கப்படமாட்டாது.

**11.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

திறமை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில், நேர்முகப் பரீட்சை சபை திருப்தியடையும் விதத்தில் விண்ணப்பதாரர்கள், தங்கள் ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை:
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு:
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**12.0 தவறான தகவல்களை வழங்குதலின் பொருட்டான தண்டனை:**

பரீட்சார்த்தி ஒருவர் நேர்முகப் பரீட்சையின் பொருட்டு தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், நேர்முகப்பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அல்லது நேர்முகப்பரீட்சையின் போது அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல்கள் தவறானது எனத் தெரிந்தும் சமர்ப்பித்திருப்பது தெரிய வந்தால், அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால், அவர் பணியிலிருந்து நீக்கப்படலாம்.

13.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தொடர்புடைய சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை விதி மற்றும் அவற்றில் மேற்கொள்ளப் பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப் பதவியின் பொருட்டு ஏற்புடையதாகும்.

14.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் வெளியிடப்பட்டுள்ள இவ்அறிவித்தலின் மொழி உரைகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில், சிங்கள மொழிமூலமான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15.0 இந்நிபந்தனைகளில் குறிப்பிடப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் தீர்மானிக்கப்படும் .

சனுஜா கஸ்தூரிஆரச்சி,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

2025, நவெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் ( தொழில்நுட்பம்) சேவைகள் வகுதியின் பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்பு – 2025**

☐

(அலுவலக பாவனையின் பொருட்டு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:
சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1.0

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : (முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்)
உதா. : PERERA A.B.C.
.................................................................................................................................................

1.2 முழு பெயர் : ( ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்)
.................................................................................................................................................

1.3 முழுப் பெயர் : ( சிங்களம் / தமிழில் ) ...................................................................................................
.................................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

1.6 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

1.7 பாலினம் : ( ஆண் - M , பெண் - F ) ☐

1.8 திருமணமானவர் / திருமணமாகாதவர் : திருமணமானவர் : ☐ திருமணமாகாதவர் : ☐

( ✓ குறியீட்டைப் பாவிக்கவும்)

2.0 நிரந்தர முகவரி :

2.1 ஆங்கில கெப்பிடல் எழுதுக்களில்: ..........................................................................................................
.................................................................................................................................................

2.2 சிங்களத்தில் / தமிழில்: .........................................................................................................................
.................................................................................................................................................

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : ...........................................................................................
.................................................................................................................................................

3.0 நிரந்தர வதிவிடத்திற்குரிய :

3.1 மாகாண சபை : ...........................................................................................................................
3.2 மாவட்டம் : ...............................................................................................................................

4.0 தொலைபேசி இலக்கம்:

நிலையான ☐ கையடக்க ☐

5.0 கல்வித் தகைமைகள்:

1. 1. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

ஆண்டு: .................................................... பரீட்சை சுட்டெண் : ....................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

2. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்)

ஆண்டு: .................................................... பரீட்சை சுட்டெண் : ....................................

| *சித்தி பெற்ற பாடங்கள்* | *பெற்றுக் கொண்டுள்ள தேர்ச்சி* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(கல்வித் தகைமைகளை நிரூபிப்பதற்கு உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்)

6.0 தொழில்சார் தகைமைகள்:

| *பின்பற்றிய பாடநெறிகள்* | *நிறுவனம்* | *பெற்றுக் கொண்டுள்ள தொழில்சார் மட்டம்* | *பாடநெறியைப் பூர்த்தி செய்த திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

7.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பொருட்டு நீதிமன்றத்தால் குற்றவாளியாகப்பட்டிருக்கிறீர்களா?

( ✓ குறியீட்டைப் பாவிக்கவும்)

ஆம் ☐ இல்லை ☐

7.1 " ஆம் " எனில் , விவரங்களைக் குறிப்பிடவும்: ..................................................................................................................
..........................................................................................................................................................................

8.0 விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியுரைக்கின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இக் கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தகுதியற்றவன் எனவும் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் திறமையை மதிப்பீடும் நேர்முகப் பரீட்சை நடாத்துவது தொடர்பாகத் தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் இணங்கியொழுகுவதாகவும் உறுதியுரைகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

...................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ....................................................

9.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் மேற்படி 8.0 பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................................
உறுதிப்படுத்துவரின் கையொப்பம்

திகதி : ....................................................
உறுதிப்படுத்துவரின் பெயர் : ...............................................................
பதவி : ......................................................................................................
முகவரி : ..................................................................................................

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

12-44

## இலங்கைப் பாராளுமன்றம்

### சமையற்காரர் பதவி

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதியிலுள்ள பின்வரும் பதவிக்கு நல்ல தேகாரோக் கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கல்வித் தகைமை/ தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025, திசெம்பர் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

**சமையற்காரர் பதவி (வெற்றிடங்களின் எண்ணிக்கை 04)**

1. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 51,020 - 11 x 590 - 10x 680 - ரூ. 64,310.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 89,000.00 ஆகும்.)

2. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழிக்கு திறமைச் சித்தியும், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு சாதாரண சித்திகளும் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4. **தொழில்சார் தகைமைகள் :**

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM) / தொழிற்பயிற்சி அதிகார சபையில் (VTA) அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறொரு நிறுவனத்தில் ஆரம்ப மட்ட சமையல் கலை தொடர்பான ஒரு பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

5. **அனுபவம் :**

மேலே (3) மற்றும் (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், ஒரு நட்சத்திர வகுப்பு ஹோட்டலில் / அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் சமையற்காரர் பதவியொன்றில் 05 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

6. **ஆட்சேர்ப்பு முறை :**

ஒரு செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும். (மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50%ம் வெளி விண்ணப்பதாரர்களிலிருந்தும் மீதமுள்ள 50% ம் உள்ளக விண்ணப்பதாரர்களிலிருந்தும் நிரப்பப்படும்.)

7. **பரீட்சை நடைமுறை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப் படும் செய்முறைப் பரீட்சைச் சபையொன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலமும் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

(அ) **செய்முறைப் பரீட்சை :**

ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் செய்முறைப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவதுடன் அதில் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அனுப்பப்படுவர். செய்முறைப் பரீட்சையில் பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல் களின்படி புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில்சார் அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

8. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

(ii) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளு மன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங் கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத் துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக் கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

9. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டு மென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றி தழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

10. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர் புடைய திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

11. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

12. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனு மொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தேர்ந் தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப் பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப் படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

13. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத (தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் சேவை செய்பவராயின்) அல்லது பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

குஷானி ரோஹணதீர,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2025 நவெம்பர் .

இலங்கைப் பாராளுமன்றம்

மாதிரி விண்ணப்பப்படிவம்

சமையற்காரர் பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : ......................................................................
   (ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..........................................................
   (இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (Mr./Mrs/Miss) ....................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3. (அ) தனிப்பட்ட முகவரி :
   .....................................................................................................................................
   .....................................................................................................................................
   .....................................................................................................................................

   தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

   (ஆ) அலுவலக முகவரி :
   .....................................................................................................................................
   .....................................................................................................................................

   தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

   (இ) அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக:-

   தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி: .......................................................
   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

   (ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது:
   வருடங்கள் ............... மாதங்கள் ............நாட்கள்...............

5. சிவில் அந்தஸ்து : (திருமணமானவர்/திருமணமாகாதவர்)

6. பால் : (ஆண்/பெண்)

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/ இல்லை)

8. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

   க.பொ.த. (உ./த.) பரீட்சை :

| *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

க.பொ.த. (சா./த.) பரீட்சை

| *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பாடநெறி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* | *செயல்வலுப்பெறும் திகதி (effective date)* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |

11. ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

……………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ………………………………………………………………
(ஆ) முதல் நியமனத் திகதி : ………………………………………………………………
(இ) தற்போதைய பதவி : ………………………………………………………………
(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ………………………………………………………………
(உ) கொடுப்பனவுகள் : ………………………………………………………………
(ஊ) சராசரி சம்பளம் : ………………………………………………………………

13. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/ இல்லை)

ஆம் எனில், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக: ..........................................................................................................................................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீர்களா? ( ஆம் / இல்லை)
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக : ..................................................................................................................................................................................................

என்னால் இந்த விண்ணபப்பபடிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: .................................. ............................................................

விண்ணபப்பதாரரின் கையொப்பம்

திணைக்கள / நிறுவனத் தலைவரின் விதப்புரை

(அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணபப்பதாரர்களுக்கு மட்டும்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்த நிறுவனத்தில் ................................................................ பதவியை வகிக்கின்ற திரு. / திருமதி / செல்வி ............................ ................................................................... என்பவரின் விண்ணப்பப் படிவத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தமாக்கப்படவில்லை எனவும், இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்கமுடியாது. (பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக).

............................................................

திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்
அலுவலக முத்திரை

திகதி : .....................................

12-117

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுற்றாடல் அமைச்சு

## வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்/ தொழில்நுட்பம் அல்லாத -பிரிவு 2 அதிகாரி வகுதிக்கு உரிய வனவிலங்கு காப்பாளர் பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024 (2025)

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின், III தரத்தின் வனவிலங்கு காப்பாளர் பதவிகள் வெற்றிடங்கள் 257 க்கு இணைத்துக் கொள்வதற்கான தகுதிகளை உடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இணைத்துக் கொள்ளப்படுகின்ற எண்ணிக்கையில் 3% இனர் பெண்விண்ணப்பதாரிகளுக்குஒதுக்கப்படும்.போதுமானளவு விண்ணப்பதாரிகள் அளவினர் தகைமைகளைப் பெற்றிராத போது எஞ்சிய எண்ணிக்கையுள்ளோரையும் ஆண் விண்ணப்பதாரர்களிலிருந்து இணைத்துக் கொள்ளப்படும். இப்பரீட்சை 2026 மாச்சு மாதத்தில் நடாத்தப்படுகின்றதென இவ்வறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்படுகின்ற எண்ணிக்கையானோர் மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படுகின்ற திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதாவதொரு வெற்றிடமொன்று அல்லது அனைத்து வெற்றிடங்களும் அல்லது நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

01. **சம்பள அளவுத்திட்டம் :**

06 மாத பயிற்சிக் காலத்தினுள் பயிற்சி பெறுகின்ற வனவிலங்கு காப்பாளர் பதவிக்கு ரூ:18,500/- ஆன மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும். 2025.03.25 ஆந் திகதிய இலக்கம் 10/2025 உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் வனவிலங்கு காப்பாளர் III பதவிக்குரிய மாதாந்த கொடுப்பனவு அளவுத்திட்டம் ரூ. 45,230 – 10x540 – 11x630 – 10x890 – 10x1190 - ரூ. 78,360 (MN 1 – 2025) ஆகும். இந்த சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ஆகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து தங்களுக்கு இந்த சுற்றறிக்கையின் உப அட்டவணை III இன் விதிகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

02. சேவையில் அமர்த்துவதற்கான பொது விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:

i. வனவிலங்கு காப்பாளர் பதவிக்கு தெரிவு செய்யப்படுகின்ற அனைவரும் பயிற்சி வனவிலங்கு காப்பாளராக 06 மாத காலமொன்றுக்காக இணைத்துக் கொள்ளப்படுவதோடு அக்காலத்துக் கான கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற அதிகாரிகள் வனவிலங்கு காப்பாளர் III தரத்தின் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

ii. பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்குத் தவறுகின்ற அல்லது பயிற்சிக் காலத்தினுள் பயிற்சியை விட்டுச் செல்கின்ற ஒருவருக்கு மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்து இல்லை.

iii. வனவிலங்கு காப்பாளர் III தரத்தின் பதவிக்குத் தகைமையைப் பெறுகின்ற அதிகாரிகளின் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. ஓய்வூதிய முறையைப் பற்றி அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். மேலும் விதவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தின் மூலம் அடிக்கடி நியமிக்கப்படுகின்ற விதத்தில் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

iv. நியமனம். 03 வருட தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்.

v. வனவிலங்கு காப்பாளர்களின் சேவை இடங்கள் நாட்டில் வனப் பகுதிகளில் அமைந்துள்ள கஷ்டமான சேவை இடங்கள் என்பதோடு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் உத்தரவிடப்படுகின்றவாறு நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

vi. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பிக்கின்ற மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் பட மாட்டாது.

03. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.01.05 ஆம் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படக் கூடாது. அதன் பிரகாரம் 2008.01.05 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.01.05 ஆம் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்தநாள் உள்ளவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்ப தற்குத் தகுதி உள்ளனர்.

04. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

I. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரு தடவையில் சிங்களம்/தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம்

உட்பட நான்கு பாடங்குக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்கள் (06) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தளவு ஒரு பாடத்தில் (01) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல்.

III. **தொழிற் தகைமைகள் :**

துறையில் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் விசேட தகைமையொன்றாகக் கருதப்படும்.

IV. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

V. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுள்ளவராக இருக்க வேண்டும்.

VI. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு இணைத்துக் கொள்வதற்குத் தேவையான தகைமைகளை எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

VII. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும், போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

VIII. ஆண் விண்ணப்பதாரர்கள் உயரம் 05 அடி 04 அங்குலத்துக்கு குறைவாக இருத்தல் கூடாது. பெண் விண்ணப்பதாரர்கள் உயரம் 05 அடி 02 அங்குலத்துக்கு குறைவாக இருத்தல் கூடாது.

05. **ஆட்சேர்ப்பு முறை:**

I. மேலே 04 ஆம் பந்தியின் கீழ் தகைமைகளைப் பெறுகின்ற, எழுத்துப் பரீட்சையில் சித்தியடை கின்ற விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளும் சித்தியடைவதற்கான புள்ளிகளில் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப் பட்ட உத்தேசிக்கப்பட்ட எண்ணிக்கையைப் போன்று ஐந்து மடங்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உள்ளாக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில், உத்தேசிக்கப்பட்டுள்ள வெற்றிடங் களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இணைத்துக் கொள்ளப்படுவர்.

II. இணைத்துக் கொள்வதற்குரிய இறுதி வெற்றிடத் துக்கு இணைத்துக் கொள்வதில், சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் பலர் இருந்தால், அதற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களை மாத்திரம் இ ணைத்துக் கொள்ளல் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

III. எழுத்துப் பரீட்சையில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமையின் பிரகாரம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்படும். பின்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் தனிப்பட்ட ரீதியாக பெறுபேறினை அறிவிப்பது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

IV. பயிற்சிக் கால எல்லையை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற விண்ணப்பதாரர்கள் வனவிலங்கு காப்பாளர் III தரத்துக்கு 03 ஆண்டுகள் தகுதிகான் காலமொன்றுக்கு உட்பட்டு உள்ளாக்கப்படுவ தோடு, I ஆம் வினைத் திறன் தடைதாண்டல் பரீட்சையொன்றில் சித்தியடைந்ததன் பின்னர் மற்றும் 03 ஆண்டுகள் மகிழ்ச்சிகரமான சேவைக் காலமொன்றின் பின்னர் சேவையில் நிரந்தப்படுத் தப்படுவர்.

06. **பாடத்திட்டம்:**

| *பாடங்கள்* | *அதிக பட்ச புள்ளி கள்* | *காலம்* | *சித்தி யடை வதற் கான புள்ளி களின் அளவீடு* |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 1 மணித் தியாலம் | 40% |

I. **எழுத்துப் பரீட்சை :**

விண்ணப்பதாரர்களின் சிந்தித்தல், விவாதிக்கும் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் முடிவெடுக்கும் திறனை இனங்கண்டு கொள்வதற்கு முடியுமான வாறு தயாரிக்கப்படுகின்ற சுருக்கமான பதில்களை

வழங்கும் விதத்திலான வினாக்கள் 50 இனைக் கொண்ட வினாப் பத்திரமாகும்.

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். விண்ணப்பிக்கின்ற மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்காக கீழே குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படுகின்ற தலைப்புகள் | அதிகபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2. தொழிற் தகைமைகள் | 40 |
| 3. சாரணர், சூழல் கட்டுப்பாட்டு படைவீரர், மாணவர் படை குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்தல் | 15 |
| 4. விளையாட்டுத் தகைமைகள் | 20 |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

07. **விண்ணப்பம் மற்றும் ஏனைய விவரங்கள்:**

i. விண்ணப்பம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணைத்தளத்தில் "Our Services" கீழ் உள்ள" Online Applications – Recruitment Exams/E.B. Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலை முறையினூடாக மாத்திரமே (Online) சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2025 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி மு.ப. 09.00 க்கு திறக்கப்படுவதோடு 2026, சனவரி மாதம் 05 ஆம் திகதி பி.ப. 09.00 க்கு முடிவடையும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தமது தனியாள் கோவைக்கு உட்படுத்துவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பத்தை ஆங்கிலமொழியில்மாத்திரம்விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியான விண்ணப்பம் ஒன்றென திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட/ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என அமைப்புக்கு பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தை நிரப்புவதில் அவ்வறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் இடம்பெறுகின்ற எந்தவொரு சீர்திருத்தமொன்று செல்லுபடியான சீர்திருத்தமொன்றாக கருதப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

ii. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/அரச கூட்டுத் தாபனமொன்றில் விண்ணப்பதாரரொருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரைக் கொண்டும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரரொருவர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை யொன்றின் தலைவர்/ ஓய்வு பெற்ற அதிகாரி யொருவர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாரொருவர், சட்டத்தரணியொருவர், பிரபலமான நொத்தரிசொருவர், முப்படைகளின் அதிகாரமிக்க அதிகாரியொருவர், அரசின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலைத் தரத்தின் அதிகாரியொருவர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது பிற மத வழிபாட்டுத்தல் பொறுப்பாளர் அல்லது மதங்களில் கவனிக்கப் படத்தக்க நிலையொன்றை வகிக்கும் ஒருவரைக்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

iii. இவ்வறிவித்தலில் காட்டப்படுன்ற விதிகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

08. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் நிகழ்நிலை அமைப்

பினால் வழங்கப்படுகின்ற கீழுள்ள கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துவது மேற்கொள்ளப்பட வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)
ii. இணையம் மூலமான கொடுப்பனவு வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

(அ) மேலுள்ள முறையின் மூலம் கட்டணங்களைச் செலுத்தும் முறையைப் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரிய தொழில் நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ளன.

(ஆ) கட்டணங்கள் கிடைக்கப் பெற்றதென்ற குறுஞ்செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றின் மூலமோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுப் பணமும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். மேலே குறிப்பிடப்பட்ட செலுத்தும் முறையின் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்தினாலும் மீண்டும் செலுத்துவதற்கோ அல்லது பரீட்சையொன்றுக்காக மாற்றுத லொன்று இடம்பெற மாட்டாது.

09. கீழே குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களிலிருந்து ஒன்றை அல்லது னேத்தையும் அல்லது அழைக்கப் பட்ட சந்தர்ப்பமொன்றில் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்.
II. கல்விச் சான்றிதழ்கள்.
III. அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கிராம சேவை சான்றிதலொன்று (பிரதேச செயலாளரின் துணைக் கையொப்பத்துடன்)
IV. இரண்டு நடத்தைச் சான்றிழ்கள்.
V. வேறு உரிய சான்றிதழ்கள்.

**கவனத்திற் கொள்க** – இந்த ஆவணங்கள்/ சான்றிதழ்கள் அவற்றின் பிரதிகளை விண்ணப்பத் துடன் அனுப்பக் கூடாது.

10.

I. பரீட்சை இங்கு உப அட்டவணை - I இல் காட்டப்படுகின்ற நகரங்களில் அமைக்கப்படு கின்ற பரீட்சை மையங்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தையும் அதற்குரிய இலக் கத்தை விண்ணப்பத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் தெரிவுகளாக குறிப்பிடப்பட வேண்டும். ஏதாவதொரு நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்காக போது மானளவு விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கையினர் விண்ணப்பிக்கவில்லையாயின் அவ்விண்ணப்ப தாரர்கள் அவர்களின் இரண்டாம் தெரிவாக காட்டப்பட்ட நகரத்திலோ அல்லது அண்மித்த வேறொரு நகரொன்றிலோ அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையமொன்றிற்கு உட்படுத்தப்படுவர். மேலும் முன்மொழியப்பட்ட நகரங்கள் அனைத் திலும் அல்லது அதிகளவில் அல்லது பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கையினர் விண்ணப் பிக்காவிட்டால் பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் ஏற்பாடு செய்யப்படும்.

II. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்திருப்பர் எனும் முன்கூட்டிய அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை யினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியான 2026, சனவரி 05 ஆம் திகதிக்கு அல்லது அத்தினத்துக்கு முன்னர் உத்தேசிக் கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நிகழ்நிலையாக சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் நிகழ்நிலையாக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட உடனேயே அதனைக் குறிப்பிட்டு அறிவித்தலான்றை இலங்கைப் பரீட்சை திணைக்கள இணையத் தளத்தில் வெளியிடப்படும். அனுமதிப் பத்திரம் கிடைக்காவிட்டால், அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள விதத்தில் அதனை இலங்கைப் பரீட்சை திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரிப்பதில் விண்ணப்பதாரர் தான் விண்ணப் பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில்

குறிப்பிட்டு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவுவதில் பரீட்சை திணைக்களத்திடம் வினவுகின்ற எந்தவொரு தகவலையும் உறுதிப் படுத்துவதற்கு விண்ணப்பத்தின் பிரதியொன்றை, அருகில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

III. விண்ணப்பதாரரொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல், அவர் அல்லது அவள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதென ஏற்றுக் கொள்ளப்பட்டதென கருத முடியாது என்பதோடு, பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தினத்திலேயே, தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

IV. பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உள்ளாவதற்கு அவருக்கு நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதி யானதாகும்.

11. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடங்களுக்கும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் சுய அடை யாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே காட்டப்படுகின்ற எந்தவொரு ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாளஅட்டை.
II. செல்லுபடியான கடவுச்சீட்டு.
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமானவாறு முகம் மற்றும் மின்னணு சாதனங்களை அணிந்து கொண்டு இல்லை என உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வாறு இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறே தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படக் கூடாது. மேலும் பரீட்சை மண்டபத் துக்குள் உள்ளாகிய சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனைகள் :**

தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ விண்ணப்பதாரரினால் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என நிரூபிக்கப்பட்டால், எந்த வொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மை அல்லது தெரிவு செய்யப்படல் இரத்து செய்யப்பட முடியும்.

13. தேவையான சந்தர்ப்பமொன்றில் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்களைப் பற்றி வனஜீவ ராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படுகின்றவாறு செயலாற்றப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வறிவித்தலின் மொழிகளுக் கிடையில் ஏதேனும் பொருத்தமற்ற அல்லது முரண்பா டொன்று உள்ளதென விளங்கினால் அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் செயலாற்றப்படும்.

**உப அட்டவணை - 1**

பரீட்சை நிலையம் அமைந்துள்ள நகரம் மற்றும் நகர எண்:

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

பணிப்பாளர் நாயகம்,
வனஜீவராசிகள்
பாதுகாப்பு திணைக்களம்.

இலக்கம் 811/ஏ, ஜயந்திபுர வீதி
பத்தரமுல்லை.
2025.11.

12-53/1

## சுற்றாடல் அமைச்சு

## வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம்/ தொழிநுட்பம் அல்லாத அதிகாரி வகுதிக்கு உரிய III தரத்தின் வனவிலங்கு தளப் பாதுகாப்பு அதிகாரி பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024 (2025)

I. வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் III தரத்தின் வனவிலங்கு தளப் பாதுகாப்பு அதிகாரி பதவி வெற்றிடங்கள் 114 க்கு இணைத்துக் கொள்வதற்கு தகுதியுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. (ஆண் விண்ணப்பதாரர்கள் மாத்திரம்.) விண்ணப்பம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk இணைத்தளத்தில் “Our Services” கீழ் உள்ள“ Online Applications – Recruitment Exams/E.B. Exams” ஊடாக பிரசுரிக்கப் பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலை முறையினூடாக மாத்திரமே (Online) சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2025, திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி மு.ப.09.00 க்கு திறக்கப்படுவதோடு 2026, சனவரி மாதம் 05 ஆம் திகதி பி.ப. 09.00 க்கு முடிவடையும். அவ்வாறே இப்பரீட்சை 2026, மாச்சு மாதத்தில் நடாத்தப்படுகின்றதென இதனால் அறிவிக்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்படுகின்ற எண்ணிக்கையானோர் மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படுகின்ற திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதாவதொரு வெற்றிடமொன்று அல்லது அனைத்து வெற்றிடங்களும் அல்லது நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தமது தனியாள் கோவைக்கு உட்படுத்துவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

01. **சம்பள அளவுத்திட்டம்:**

06 மாத பயிற்சிக் காலத்தினுள் பயிற்சி பெறுகின்ற வனவிலங்கு தளப் பாதுகாப்பு அதிகாரி பதவிக்கு ரூ. 22,500.00 ஆன மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும். 2025.03.25 ஆந் திகதிய இலக்கம் 10/2025 உடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் MN 3 – 2025 சம்பளக் குறியீடு இப்பதவிக்கு உரித்தவதோடு அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 52,250 – 10x800 – 11x1190 – 10x1320 – 10x1350 - ரூபா 100,040.00 ஆவதோடு இந்த சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் திகதியிலிருந்து ஆகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து தங்களுக்கு இந்த சுற்றறிக்கையின் உபஅட்டவணை III இன் விதிகளின்படி சம்பளம் வழங்கப்படும்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான பொது விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

i. வனவிலங்கு தளப் பாதுகாப்பு அதிகாரி பதவிக்கு தெரிவு செய்யப்படுகின்ற அனைவரும் பயிற்சி வனவிலங்கு காப்பாளராக 06 மாத காலமொன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

ii. பயிற்சிப் பாடநெறியை நிறைவு செய்த அதிகாரிகள் வனவிலங்கு தள பாதுகாப்பு அதிகாரி III தரத்தின் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

iii. பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்வ தற்குத் தவறுகின்ற அல்லது பயிற்சிக் காலத்தினுள் பயிற்சியை விட்டுச் செல்கின்ற ஒருவருக்கு மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்து இல்லை. அது தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

iv. வனவிலங்கு தள பாதுகாப்பு அதிகாரி III தரத்தின் பதவிக்குத் தகைமையைப் பெறுகின்ற அதிகாரி களின் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. ஓய்வூதிய முறையைப் பற்றி அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். மேலும் விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தின் மூலம் அடிக்கடி நியமிக்கப்படுகின்ற விதத்தில் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

v. நியமனம். 03 வருட தகுதிகாண் காலத்துக்கு உட் பட்டதாகும்.

vi. வனவிலங்கு தள பாதுகாப்பு அதிகாரிகளின் சேவை இடங்கள் நாட்டில் வனப் பகுதிகளில் அமைந்துள்ள கஷ்டமான சேவை இடங்கள் என்பதோடு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் உத்தரவிடப்படுகின்றவாறு நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

vii. வர்த்தமானப் பத்திரிகையில் 2 ஆம் பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிப்பதற்கு உரித்தான பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

viii. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பிக்கின்ற மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

03. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.01.05 திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படக்கூடாது. (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.) அதன் பிரகாரம் 2008.01.05 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.01.05 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த நாள் உள்ளவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதி உள்ளனர்.

04. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

I. கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரு அமர்வில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்கள் (06) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

II. பழைய பாடத்திட்டத்தின் கீழ் கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் தாவர விஞ்ஞானம் மற்றும் விலங்கு விஞ்ஞானம் எனும் பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

புதிய பாடத்திட்டத்தின் கீழ் கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் ஒரு அமர்வில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுள்ளவராக இருக்க வேண்டும்.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு இணைத்துக் கொள்வதற்குத் தேவையான தகைமைகளை எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

V. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும், போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

VI. ஆண் விண்ணப்பதாரர்கள் மாத்திரமாக இருத்தல் என்பதோடு, உயரம் 05 அடியாகும். 04 அங்குலத்துக்கு குறைவாக இருத்தல் கூடாது. மார்பு 32 அங்குலமாக இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை:**

I. மேலே 04 ஆம் பந்தியின் கீழ் தகைமைகளைப் பெறுகின்ற, எழுத்துப் பரீட்சையில் சித்தியடைகின்ற விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளும் சித்தியடைவதற்கான புள்ளிகளில் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தேசிக்கப்பட்ட எண்ணிக்கையைப் போன்று ஐந்து மடங்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உள்ளாக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில், உத்தேசிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இணைத்துக் கொள்ளப்படுவர்.

II. இணைத்துக் கொள்வதற்குரிய இறுதி வெற்றிடத்துக்கு இணைத்துக் கொள்வதில், சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் பலர் இருந்தால், அதற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களை மாத்திரம் இணைத்துக் கொள்ளல் அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

III. எழுத்துப் பரீட்சையில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமையின் பிரகாரம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்படும். பின்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் தனிப்பட்ட ரீதியாக பெறுபேறினை அறிவிப்பது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

V. பயிற்சிக் கால எல்லையை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற விண்ணப்பதாரர்கள் வனவிலங்கு தள பாதுகாப்பு அதிகாரி III தரத்துக்கு 03 ஆன ஆண்டுகள் தகுதிகாண் காலமொன்றுக்கு உட்பட்டு உள்ளாக்கப்படுவதோடு, I ஆம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையொன்றில் சித்தியடைந்ததன் பின்னர் மற்றும் 03 ஆண்டுகள் மகிழ்ச்சிகரமான சேவைக்காலமொன்றின் பின்னர் சேவையில் நிரந்தப்படுத்தப்படுவர்.

06. பாடத்திட்டம்:

I. எழுத்துப் பரீட்சை

| *பாடங்கள்* | *காலம்* | *உயர்ந்த பட்ச புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| 02. பொது அறிவு மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு | 2 மணித்தியாலம | 100 | 40% |

**நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் உளச்சார்பு :**

வார்த்தைகள், எண்கள், படங்கள் வடிவில் வழங்கப்படுகின்ற சிக்கல் வகைகளாகும். விண்ணப்பதாரர்கள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இப்பிரச்சினையைப் பற்றிப் புரிந்து கொள்ளல், அளவிடுதல் மற்றும் காலத்துக்கும் இடத்துக்கும் இடையிலான தொடர்பை புரிந்து கொள்வதில் விண்ணப்பதாரர்களின் திறனை அளவிடும் குறுகிய வினாக்களைக் கொண்ட வினாத்தாளொன்றாகும்.

**பொது அறிவு மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு :**

வனவிலங்குப் பாதுகாப்பினைப் பற்றிய தேசிய வலய மற்றும் முழு உலகின் அமைப்புக்கள், சூழலைப் பற்றிய அறிவு மற்றும் சமூக, கலாசார மற்றும் விஞ்ஞான, அரசியல், பொருளாதார விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரரின் அறிவுத் தன்மையை அளவிட்டுப் பார்க்கும் வினாத்தாளொன்றாகும்.

I. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்படுகின்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படுகின்ற தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகளின் அளவு* |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2. மொழி அறிவு | 10 |
| 3. அனுபவம் | 20 |
| 4. தொழிற் தகைமைகள் | 30 |
| 5. திறன்கள் மற்றும் விசேட திறமைகள் | 15 |
| 6. ஆளுமை | 05 |
| மொத்தம் | 100 |

07. **விண்ணப்பம் மற்றும் ஏனைய விவரங்கள்:**

I. நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியான விண்ணப்பம் ஒன்றென திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட/ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என அமைப்புக்கு பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி எண்ணுக்கு குறுஞ் செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தை நிரப்புவதில் அவ்வறிவுறுத்தல்களை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் இடம்பெறுகின்ற எந்தவொரு சீர்திருத்தமொன்று செல்லுபடியான சீர்திருத்தமொன்றாக கருதப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதனைத் தாமதிப்பதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலையையும் விண்ணப்பதாரரினால் தாங்கிக் கொள்ள வேண்டும்.

II. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் விண்ணப்பதாரரொருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகார மளிக்கப்பட்ட அதிகாரியொருவரைக் கொண்டும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரரொருவர் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் தலைவர்/ ஓய்வு பெற்ற அதிகாரியொருவர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரபலமான நொத்தாரிசொருவர், முப்படைகளின் அதிகாரமிக்க அதிகாரியொருவர், அரசாங்கத்தின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலைத் தரத்தின் அதிகாரியொருவர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது பிற மத வழிபாட்டுத்தல பொறுப்பாளர் அல்லது மதங்களில் கவனிக்கப்படத்தக்க நிலையொன்றை வகிக்கும் ஒருவர் அல்லது கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

08. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூ 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் நிகழ்நிலை அமைப்பினால் வழங்கப்படுகின்ற கீழுள்ள கட்டணம்

செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துவது மேற்கொள்ளப்பட வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)
ii. இணையம் மூலமான கொடுப்பனவு வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேலுள்ள முறையின் மூலம் கட்டணங்களைச் செலுத்தும் முறையைப் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் (பரீட்சைக்கு உரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் குறிப் பிடப்பட்டுள்ளன.)

(ஆ) கட்டணங்கள் கிடைக்கப் பெற்றதென்ற குறுஞ்செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றின் மூலமோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுப் பணமும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட செலுத்தும் முறையின் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதில் ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்தினாலும் மீண்டும் செலுத்துவதற்கோ அல்லது பரீட்சையொன்றுக்காக மாற்றுத லொன்று இடம்பெற மாட்டாது.

09. கீழே குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களிலிருந்து ஒன்றை அல்லது அனைத்தையும் அல்லது அழைக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றில் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்.
II. கல்விச் சான்றிதழ்கள்.
III. அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கிராம சேவை சான்றிதலொன்று (பிரதேச செயலாளரின் துணைக் கையொப்பத்துடன்)
IV. இரண்டு நடத்தைச் சான்றிழ்கள்.
V. வேறு உரிய சான்றிதழ்கள்

10.

I. பரீட்சை இங்கு உப அட்டவணை - I இல் காட்டப்படுகின்ற நகரங்களில் அமைக்கப்படுகின்ற பரீட்சை மையங்களில் நடைபெறும். விண்ணப்ப தாரர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர் பார்க்கும் நகரத்தையும் அதற்குரிய இலக்கத்தை விண்ணபத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் தெரிவுகளாக குறிப்பிடப்பட வேண்டும். ஏதாவ தொரு நகரமொன்றில் பரீட்சை நிலைய மொன்றை அமைப்பதற்காக போதுமானளவு விண்ணப்ப தாரர்கள் எண்ணிக்கையினர் விண்ணப்பிக்க வில்லையாயின் அவ்விண்ணப்பதாரர்கள் அவர் களின் இரண்டாம் தெரிவாக காட்டப்பட்ட நகரத்திலோ அல்லது அண்மித்த வேறொரு நகரொன்றிலோ அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலைய மொன்றிற்கு உட்படுத்தப்படுவர். மேலும் முன்மொழியப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிகளவில் அல்லது பரீட்சை நிலை யங்களை அமைப்பதற்கு போதுமானளவு விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கையினர் விண்ணப் பிக்காவிட்டால் பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் ஏற்பாடு செய்யப்படும்.

II. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்திருப்பர் எனும் முன்கூட்டிய அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை யினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2026.01.05 ஆந் திகதிக்கு அல்லது அத்தினத்துக்கு முன்னர் உத்தேசிக்கப் பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்களை நிகழ்நிலையாக சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையாக அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட உடனேயே அதனைக் குறிப்பிட்டு அறிவித்தலான்றை இலங்கை பரீட்சை திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அனுமதிப் பத்திரம் கிடைக்காவிட்டால், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அதனை இலங்கை பரீட்சை திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரிப்பதில் விண்ணபதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவுவதில் பரீட்சை திணைக்களத்திடம் வினவுகின்ற எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்கு

விண்ணப்பத்தின் பிரதியொன்றை, அருகில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். அனுமதிப் பத்திரம் மாற்றியமைக்கப்பட்டால் நேர காலத்துடன் இலங்கை பரீட்சை திணைக்களத்தை அழைத்து விண்ணப்பத்தின் பிரகாரம் மாற்றங்களை மேற்கொள்ள முடியும். பரீட்சை மண்டபத்தில் மாற்றங்களுக்காக முன்வைக்கப்படுகின்ற கோரிக்கை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

III. விண்ணப்பதாரரொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதென ஏற்றுக் கொள்ளப்பட்டதென கருத முடியாது என்பதோடு, பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தினத்திலேயே, தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

IV. பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளிக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உள்ளாவதற்கு அவருக்கு நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாகும்.

11. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடங்களுக்கும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் விதத்தில் சுய அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே காட்டப்படுகின்ற எந்தவொரு ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்

I. தேசிய அடையாளஅட்டை.
II. செல்லுபடியான கடவுச்சீட்டு.
III. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமானவாறு முகம் மற்றும் மின்னணு சாதனங்களை அணிந்து கொண்டு இல்லைஎனஉறுதிப்படுத்திக்கொள்ளமுடியுமானவாறு இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறே தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படக் கூடாது. மேலும் பரீட்சை மண்டபத்துக்குள் உள்ளாகிய சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனைகள் :**

தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ விண்ணப்பதாரரினால் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என நிரூபிக்கப்பட்டால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மை அல்லது தெரிவு செய்யப்படல் இரத்து செய்யப்பட முடியும்.

13. தேவையான சந்தர்ப்பமொன்றில் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்களைப் பற்றி வனஜீவ ராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படுகின்றவாறு செயலாற்றப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இவ்வறிவித்தலின் மொழிகளுக் கிடையில் ஏதேனும் பொருத்தமற்ற அல்லது முரண்பாடொன்று உள்ளதென விளங்கினால் அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் செயலாற்றப்படும்.

**உப அட்டவணை - 1**

பரீட்சை நிலையம் அமைந்துள்ள நகரம் மற்றும் நகர எண்:

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

பணிப்பாளர் நாயகம்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்,
இலக்கம் 811/ஏ, ஜயந்திபுர வீதி,
பத்தரமுல்லை.

12-53/2

## விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2026 (I)

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்கள் செல்வதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2026 பெப்ரவரி மாதம் கண்டியில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பரீட்சை தொடர்பான விபரம் :**

2013.12.13 ஆம் திகதிய இலக்கம் 1840/51 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவை பிரமானக் குறிப்பில் 08 ஆம் பந்தியின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அங்கு ஐந்தாவது பின்னிணைப்பில் குறிப்பிட்டடுள்ளவாறு பரீட்சை தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**பரீட்சை தொடர்பான விபரம் :**

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளி* |
|---|---|---|---|
| முகாமைத்துவம் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

03. **பரீட்சையின் பொருட்டு பாடவிதானம் :**

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| முகாமைத்துவம் | 1. முகாமைத்துவ மூலதத்துவங்கள்<br>2. முகாமைத்துவ முறைகள்<br>3. முகாமைத்துவச் சூழல்<br>4. பங்குபற்றல் முகாமைத்துவம்<br>5. பொதுமக்கள் தொடர்பு<br>6. நல்லாட்சி<br>7. நற்பண்புகள் |

04. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

05. விண்ணப்பப் பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும்.

06. அந்த விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியை தம் வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப் பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவை பிரமானத்திற்கு அமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஆவார். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளின் பொருட்டு உரித்தாகின்ற சகல சட்ட ஒழுங்குவிதிகளும் இப்பரீட்சைக்கும் பொருந்தும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்

08. விண்ணப்பங்கள் யாவும் 2026.01.05 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கிழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த.பெ.இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

09. முதற்தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற விண்ணப்ப தாரர்களிடம் இருந்து பரீட்சையின் பொருட்டு கட்டணம் அறவிடப்பட மாட்டாது. இரண்டாவது தடவையாக அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் பரீட்சைக்கு அமருகின்ற உத்தியோகத்தர்கள் பரீட்சை

கட்டணமாக ரூபா 600.00 செலுத்த வேண்டும். அந்த பரீட்சைக் கட்டணத்தை கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 எனும் திணைக்கள தலைப்புக்கு வரவு வைக்கும் வகையில் திணைக்களத்தின் சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை அல்லது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேராதனை மக்கள் வங்கியில் பேனப்பட்டு வருகின்ற இலக்கம் 057100179027275 கொண்ட கணக்கிற்கு தீவின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் கட்டணத்தை வரவு வைத்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். எவ்விதக் காரணத்திற்காகவும் இக்கட்டணத்தை மீளப்பெற முடியாது.

10. பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தொகையை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழிமூலத்தை குறிப்பிட்டு விண்ணப்பகாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றுதலுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

11. விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப் பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு திணைக்கள இணையத்தளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய விண்ணப்பகாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சள் முகவரி என்பன குறிப்பிட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நீங்கள் தன்வசம் வைத்திருக்கும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டனம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத்தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட் சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

13. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக் களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்துகொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச் சீட்டு அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரமேயாகும். விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்ப தாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தயோகத்தரிடம் இருந்து சான்றுபடுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பகாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சை தினமன்று தமது கையொப்பத்தை சான்றுப் படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பகாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

14. அவ்வாறே பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பகாரர் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்கு இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் காதுகள் மறைக்கப்படாது பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பக்காரருக்கு பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பக்காரரை அடையாளம் காண முடியுமாகின்ற வகையில் முகம் மற்றும் காதுகளை மறைக்கப்படாது இருத்தல் வேண்டும்;.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக் கிடையே மொழிமூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

டாக்டர். கே.கே.சரத்,
கால்நடை உற்பத்தி சுகாதாரப்
பணிப்பாளர் நாயகம்.
(கடமை பார்க்கும் - முழுநேர)

2025.11.25.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விவசாய கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2026(I)**

The 3rd EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE – 2026(I)

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்)
(உதாரனம் HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA) :
……………………………………………………………………………………………………
(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) (உதாரனம் GUNAWARDHANA H.M.S.K):
……………………………………………………………………………………………………
(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ……………………………………………………………………

02. தபால் முகவரி : (அனுமதிப்பத்திரம் அனுப்புவதற்காக)
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
அலுவலக முகவரி : ……………………………………………………………………………………

03. பால்
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

05 கையடக்க தொலைபேசி இலக்கம் :

06. இதற்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றினீரா இல்லையா என்பதை குறிப்பிடுக. அவ்வாறாயின் ஆண்டு மற்றும் மாதம் என்பவற்றை குறிப்பிடுக. : …………………………………………………………………………

07 பிறந்த திகதி : வருடம் : மாதம் : திகதி :

08. பதவிப் பெயர் : ……………………………………………………………
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

09. திணைக்களத்தின் பெயர் : ……………………………………………………
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

10. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :……………

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும், விண்ணபத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும் உறுதி மொழிகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளுக்கு உரிய சகல ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டனம் : ரூபா. ………………
பணம் செலுத்தப்பட்ட பணிமனை : …………………… பற்றுச் சீட்டு இலக்கம் : ………………

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை வைத்துக் கொள்ளவும்) |
|---|

திகதி ................................................ ........................................................

விண்ணப்பக்காரரின் கையொப்பம்

…………………………………………………… ஊடாக
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ………………….இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/அலகில் ……………………………… ஆக கடமை புரிவதுடன் அவரது விண்ணப்பம் சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். இங்கு காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத்தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பக்காரர் உரிய பரீட்சைக் கட்டனத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : ................................. ...................................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்.
பதவிப் பெயரும்.
(அலுவலக முத்திரை)

(*கட்டணம் செலுத்தாத விடத்து வெட்டிவிடல் வேண்டும்)
* (கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் - விண்ணப்பகாரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/நகரசபை/அலகு/தலைவர் ஒருவரால் சான்றுபடுத்தல் வேண்டும்).

12-107/1

---

**விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**
**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான**
**இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2026(I)**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2026, பெப்புருவரி மாதம் கண்டியில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் II ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பாடவிதானம் :**

இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 2013.12.13 ஆம் திகதிய இலக்கம் 1840/51 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

04. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

| *வினாப்பத்திரம்* | *விடய இல* | *பாடப்பரப்பு (சேவைப் பிரமானத்தில் 4 ஆம் பின்னிணைப்பில் இலக்கம் 5 இல் உள்ளவாறு)* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளி* |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | பாடப்பரப்பின் 2:1, 2:2, 4:1, 4:2, 5:2, 5:8, 6:5, 7:2:1, 8:2, 8:2:2, 8:2:3, 8:3:1, 9:2, 9:4, 9:6, 9:7 பகுதிகள் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| அல்லது | | | | | |
| 2 ஆம் பகுதி | 02 | பாடப்பரப்பின் 1:1:1, 1:1:4, 1:2:1, 3:2, 3:1:1, 3:1:2, 3:2:1, 10:1:1, 10:1:2, 10:1:3, 10:1:4, 10:1:6, 10:2:1, 10:2:8, மற்றும் 10:4:1 பகுதிகள் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 3 ஆம் பகுதி | 3 ஆம் பகுதியில் 2 வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும். | | | | |
| *வினாப்பத்திரம்* | *விடய இல* | *பாடப்பரப்பு (சேவைப் பிரமானத்தில் 4 ஆம் பின்னிணைப்பில் இலக்கம் 5 இல் உள்ளவாறு)* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளி* |
| 1. வினாப்பத்திரம் | 03-1 | மிருக வைத்திய தொற்று நோயியல் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. வினாப்பத்திரம் | 03-2 | கால்நடை வளப் பொருளியல் விஞ்ஞானம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. வினாப்பத்திரம் | 03-3 | கால்நடைப் பொதுச் சுகாதாரம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. வினாப்பத்திரம் | 03-4 | விவசாய விரிவாக்கல் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 5. வினாப்பத்திரம் | 03-5 | மரபணுவியல் மற்றும் இனப்பெருக்கம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 6. வினாப்பத்திரம் | 03-6 | கால்நடை உடற்றொழிலியல் மற்றும் இனப்பெருக்கம் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 7. வினாப்பத்திரம் | 03-7 | கால்நடை வசிப்பிட அமைப்பும் முகாமைத்துவமும் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 8. வினாப்பத்திரம் | 03-8 | கால்நடைப் போஷாக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40 |

| *வினாப்பத்திரம்* | *விடய இல* | *பாடப்பரப்பு (சேவைப் பிரமானத்தில் 4 ஆம் பின்னிணைப்பில் இலக்கம் 5 இல் உள்ளவாறு)* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடை வதற்கான புள்ளி* |
|---|---|---|---|---|---|
| 9. வினாப்பத்திரம் | 03-9 | புல் மற்றும் வெட்டிக் கொடுக்கப்படும் புல் மற்றும் இலை குழை வகைகள் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 10. வினாப்பத்திரம் | 03-10 | பிரயோகக் கால்நடை நுண்ணங்கியியல் மற்றும் நீர்ப்பீடனவியல் | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 11. வினாப்பத்திரம் | 03-11 | பிரயோக கால்நடை வைத்தியமும் நோயியலும் ஒட்டுண்ணியியலும். | 03 மணித்தியாலம் | 100 | 40 |

04. **பாடவிதானம் :**

2013.12.13 ஆம் திகதிய இலக்கம் 1840/51 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் நான்காவது பின்னிணைப்பில் இலக்கம் 05 இன் கீழ் உள்ள பாடவிதானம் இதற்கு ஏற்புடையதாகும்.

05. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கண்டியில் அமையப் பெறும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

06. விண்ணப்பப் பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 தாளின் இரு பக்கங்களையும் பயண்படுத்தி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். அந்த விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியை தம் வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து அல்லது பூரணப்படுத்தப்பபடாத விண்ணப்பங்கள் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. இலக்கம் 2422/49 மற்றும் 2025.02.07 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவைப் பிரமானத்தின் திருத்த இலக்கம் 04 இற்கு அமைய பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் என்பதினால், பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பபடுகின்ற தேசிய மட்ட பரீட்சைகள் பொருட்டு உரிய அனைத்து ஒழுங்கு விதிகளும் இப்பரீட்சைக்கும் ஏற்புடையதாகும். அந்த ஒழுங்கு விதிகளை பின்பற்றாத விடத்து கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

08. விண்ணப்பங்கள் யாவும் 2026.01.05 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கிழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த.பெ.இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

09. பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ

அத்தொகையை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழிமூலத்தை குறிப்பிட்டு விண்ணப்பகாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றுதலுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

10. விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு அறிவித்தல் ஒன்று திணைக்கள இணையத் தளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக் களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய விண்ணப்பகாரரது பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்ஞல் முகவரி என்பவற்றை குறிப்பிட்டு அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு உடனடியாக அறியத்தருதல் வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பகாரரினால் தன்வசம் வைத்திருக்கும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டனம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் பதிவுத்தபாலிட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

11. மேலே 10 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்தி களால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பகாரர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் அமரும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. ஏற்றுக் கொள்ளத்தக்க கடவுச் சீட்டு
iii. ஏற்றுக் கொள்ளத்தக்க இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே உரிய விண்ணப்பகாரர் தமது ஆளடை யாளத்தை உறுதி செய்து கொள்ள இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பகாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழையவிட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடிவுற்று மண்டபத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பக்காரர்களை இனங்காண இயலுமாகின்ற வகையில் முகத்தையும் இரண்டு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

13. இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப் படவுள்ளது.

அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக

| | | |
|---|---|---|
| முழுப் பரீட்சை | - | ரூபா. 1200.00 |
| ஒரு பாடம் | - | ரூபா. 400.00 |

இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்பகாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களை செலுத்துமாறு வேண்டப்படு கின்றார்கள். பரீட்சைக் கட்டணத்தை கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் 2003-99-00 எனும் திணைக்கள தலைப்புக்கு வரவு வைக்கும் வகையில் திணைக்களத்தின் சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை அல்லது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேராதனை மக்கள் வங்கியில் பேனப்பட்டு வருகின்ற இலக்கம் 057100179027275 கொண்ட கணக்கிற்கு தீவின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் கட்டணத்தை வரவு வைத்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். எவ்விதக் காரணத்திற்காகவும் இக்கட்டணத்தை மீளப்பெற முடியாது.

14. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

15. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக் கிடையே மொழிமூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது ஏதேனும் முரண்;பாடுகள் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

டாக்டர். கே.கே.சரத்
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்
(கடமை பார்க்கும் - முழுநேர)

2025.11.25.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விவசாய கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான
இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2026(I)**

The 2nd EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA
ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE – 2026(I)

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் சிங்களம் - 2 ☐
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்)
(உதாரனம் HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA) :
……………………………………………………………………………………………
(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாரு பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) (உதாரனம் GUNAWARDHANA H.M.S.K):
……………………………………………………………………………………………
(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ……………………………………………………

02. தபால் முகவரி : (அனுமதிப்பத்திரம் அனுப்புவதற்காக)
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
அலுவலக முகவரி : ……………………………………………………………………………

03. பால்
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05 கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள்
(தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

| *பாட இலக்கம்* | *பாடம்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

07. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதை குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக:……………………………… ………………………………………………………………………………

08. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

09. பதவிப் பெயர் : ……………………………………………………………………
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

திணைக்களத்தின் பெயர் : ……………………………………………………….
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

10. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :……………

11. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற திகதி: ………………

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும், விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும் உறுதி மொழிகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளுக்கு உரிய சகல ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டனம் : ரூபா. ………………
பணம் செலுத்தப்பட்ட பணிமனை : …………………… பற்றுச் சீட்டு இலக்கம் : ………………

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்துக் கொள்ளவும்) |
|---|

திகதி ................................................ .........................................................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்

…………………………………………………… ஊடாக
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ………………….இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/அலகில் ……………………………… ஆக கடமை புரிவதுடன் அவரது விண்ணப்பம் சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

இங்கு காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத் தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது என அத்தாட்சிப்படுத்துகின்றேன். *விண்ணப்பக்காரர் உரிய பரீட்சைக் கட்டனத்தை செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : ................................. .......................................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்.
பதவிப் பெயரும்.
(அலுவலக முத்திரை)

(*கட்டணம் செலுத்தாத விடத்து வெட்டிவிடல் வேண்டும்)
* (கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் - விண்ணப்பக்காரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/நகரசபை/அலகு/தலைவர் ஒருவரால் சான்றுப்படுத்தல் வேண்டும்).

12-107/2

## விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2026 (I)

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2026 பெப்புருவரி மாதம் கண்டியில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் மூன்றாம் தரத்தில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பாடவிதானம் :**

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் 2013.12.13 ஆம் திகதிய இலக்கம் 1840/51 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளின் போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

03. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு.

| *பாட இலக்கம்* | *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | நிதி முறைமைகள் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | நிருவாகம் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 1 | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 2 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

04. **பரீட்சைக்கான பாடப்பரப்பு :**

| *வினாப்பத்திரம்* | | *பாடப்பரப்பு* |
|---|---|---|
| *பாட இலக்கம்* | *பாடம்* | |
| 01 | நிதி முறைமைகள் | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப்பிரமானம் - (X ஆம் அத்தியாயம் தவிர) |
| 02 | நிருவாகம் | (அ) அலுவலக முறை, அலுவலக முகாமை மற்றும் அலுவலக ஒழுங்குபடுத்தும் முறைமைகள் தொடர்பான அறிவு.<br>(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதியின் அத்தியாயம் I - XXII மற்றும் தாபனவிதிக் கோவையின் VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள். |
| 03 | திணைக்களப் பிரமாணம் - 1 | கால்நடைச் சட்டங்கள், கால்நடை நோய்ச் சட்டம் மற்றும் அதனோடிணைந்த விதிகள், திணைக்களத்தின் கட்டளைகள் மற்றும் கால்நடை வைத்தியத் துறைக்குரிய சுற்று நிருபங்கள். |

| *வினாப்பத்திரம்* | | *பாடப்பரப்பு* |
|---|---|---|
| *பாட இலக்கம்* | *பாடம்* | |
| 04 | திணைக்களப் பிரமாணம் - 2 | (அ) சோதனை மாதிரிகளை அனுப்புதல், ஆய்வுகூட பரிசோதனை மூலம் இனங்காணலும் மரண பரிசோதனை செய்தல் கர்ப்ப பரிசோதனையும் மற்றும் ஏனையவற்றை இனங்காணும் பரிசோதனை, தொற்று நோய்கள் மற்றும் தொடுகையால் பரவும் நோய்களுக்கான தடுப்பூசிகள், நீர்ப்பாசனம் மற்றும் பரிசோதனை<br>(ஆ) செயற்கை சினைப்படுத்தும் முறைகளும் அவற்றைப் பிரயோகித்தலும். இனப்பெருக்கமும்; மற்றும் பசுக்கன்று வளர்ப்பு முறைகளும். முட்டை அடைகாக்கும் முறையூடாக முட்டை பொரித்தலும் கோழிக் குஞ்சு வளர்ப்பும், கால்நடைப் போஷாக்கும், உணவு அட்டவணையைப் பயன்படுத்தல் புல் வளர்ப்பும், 'சைலேஜ்" தயாரித்தல் மற்றும் கால்நடை வள முகாமைத்துவம்.<br>(இ) பால் உற்பத்தி, கிருமி நீக்கிய பாலைப் போத்தலில் அடைத்தலும் விநியோகித்தலும், பாலின் தரத்தைப் பேணுதல், பாலில் பக்றீரியா, பாலின் கொழுப்பு வீதம் மற்றும் உள்ளடங்கள்களைப் பரீட்சித்தல் பாலாடை வேறாக்கல், பட்டர், வெண்ணெய் மற்றும் தயிர் உற்பத்தி<br>(ஈ) கொல்களத்தில் விலங்குகளை வெட்டுதல், இறைச்சி வகைகளை அடையாளம் காணல் உள்ளடங்கலாக மற்றும் இறைச்சி வகைகள் பரீட்சித்தல். |

05. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கண்டியில் அமையப் பெறும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

06. விண்ணப்பப் பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 தாளின் இரு பக்கங்களையும் பயண்படுத்தி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். அந்த விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியை தம் வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. இலக்கம் 2422/49 மற்றும் 2025.02.07 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவைப் பிரமானத்தின் திருத்த இலக்கம் 04 இற்கு அமைய பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் என்பதினால், பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பபடுகின்ற தேசிய மட்ட பரீட்சைகள் பொருட்டு உரிய அனைத்து ஒழுங்கு விதிகளும் இப்பரீட்சைக்கும் ஏற்புடையதாகும். அந்த ஒழுங்கு விதிகளை பின்பற்றாத விடத்து கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

08. விண்ணப்பங்கள் யாவும் 2026.01.05 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக கிழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த.பெ.இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

09. பரீட்சைக் கட்டனம் செலுத்த வேண்டியவராயின் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தொகையை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்தை குறிப்பிட்டு விண்ணப்பகாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றுதலுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும்.

10. விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப் பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு அறிவித்தல் ஒன்று திணைக்கள இணையதளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப் பட்டதற்கு அமைய விண்ணப்பகாரரது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்ஞல் முகவரி என்பவற்றை குறிப்பிட்டு அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு உடனடியாக அறியத்தருதல் வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்படுகின்ற தேவையான தகவல் களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் பதிவுத்தபாலிட்ட பற்றுச் சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

11. மேலே 10 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த் திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பகாரர் பரீட்சை மண்டபத்தினுள் தாம் அமரும் ஒவ்வொறு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. ஏற்றுக் கொள்ளத்தக்க கடவுச் சீட்டு
iii. ஏற்றுக்கொள்ளத்தக்க இலங்கை சாரதி அனு மதிப்பத்திரம்.

அவ்வாறே உரிய விண்ணப்பக்காரர் தமது ஆளடை யாளத்தை உறுதி செய்து கொள்ள இயலுமாகின்ற வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பகாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழையவிட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் உள்நுழைந்தது முதல் பரீட்சை முடிவுற்று மண்டபத்தில் இருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பக்காரர்களை இனங்காண இயலுமாகின்ற வகையில் முகத்தையும் இரண்டு காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

13. இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப் படவுள்ளது.

அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக

| | | |
|---|---|---|
| முழுப் பரீட்சை | - ரூபா | 1200.00 |
| ஒரு பாடம் | - ரூபா | 300.00 |

இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்ப தாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களை செலுத்துமாறு வேண்டப்படு கின்றார்கள். பரீட்சை கட்டணத்தை கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் 2003-99-00 எனும் திணைக்கள தலைப்புக்கு வரவு வைக்கும் வகையில் திணைக்களத்தின் சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை அல்லது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேராதனை மக்கள் வங்கியில் பேனப்பட்டு வருகின்ற இலக்கம் 057100179027275 கொண்ட கணக்கிற்கு தீவின் எந்தவொறு மக்கள் வங்கிக் கிளையிலும் கட்டணத்தை வரவு வைத்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். எவ்விதக் காரணத்திற்காகவும் இக்கட்டணத்தை மீளப் பெற முடியாது.

14. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

15. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக் கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது ஏதேனும் முரண்;பாடுகள் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

டாக்டர். கே.கே.சரத்
கால்நடை உற்பத்தி சுகாதாரப்
பணிப்பாளர் நாயகம்
(கடமை பார்க்கும் - முழுநேர)

2025. 11.25.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**விவசாய கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2026(I)**

The 1st EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE – 2026(I)

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்)
(உதாரனம் HERATH MUDIYANSALAGE SAMAN KUMARA GUNAWARDHANA) :
……………………………………………………………………………………………………

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாரு பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) (உதாரனம் GUNAWARDHANA H.M.S.K):
……………………………………………………………………………………………………

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ………………………………………………………………

02. தபால் முகவரி : (அனுமதிப்பத்திரம் அனுப்புவதற்காக)
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
அலுவலக முகவரி : ……………………………………………………………………………

03. பால்
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

04 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

05 கையடக்க தொலைபேசி இலக்கம் :

06. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள்
(தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

| *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

07. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீரா என்பதை குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக

:…………………………………………………………………………………………………………

08. பிறந்த திகதி : வருடம் : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

09. பதவிப் பெயர் : ……………………………………………………………………
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

திணைக்களத்தின் பெயர் : ………………………………………………………
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

10. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :……………

11. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற திகதி: ………………

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும், விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும் உறுதி மொழிகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளுக்கு உரிய சகல ஒழுங்கு விதிகளுக்கும் நான் உட்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டனம் : ரூபா ………………
பணம் செலுத்தப்பட்ட பணிமனை : ……………………    பற்றுச் சீட்டு இலக்கம் : ………………

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை வைத்துக் கொள்ளவும்) |
|---|

திகதி ................................................    ........................................................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்

…………………………………………………… ஊடாக
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ………………….இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/அலகில் ……………………………… ஆக கடமை புரிவதுடன் அவரது விண்ணப்பம் சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

இங்கு காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத்தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பக்காரர் உரிய பரீட்சைக் கட்டனத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி : .................................    .....................................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்.
பதவிப் பெயரும்.
(அலுவலக முத்திரை)

(*கட்டணம் செலுத்தாத விடத்து வெட்டிவிடல் வேண்டும்)
* (கையொப்பத்தை அத்தாட்ச்சிப்படுத்தல் - விண்ணப்பகாரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/திணைக்களம்/மாகாண சபை/நகரசபை/அலகு/தலைவர் ஒருவரால் சான்றுபடுத்தல் வேண்டும்).

12-107/3

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2025**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பா** | .. | வெள்ளி | 05.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2025 |
| | | வெள்ளி | 12.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2025 |
| | | வெள்ளி | 19.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2025 |
| | | வெள்ளி | 26.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2025 |

**அட்டவணை - 2026**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 02.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.12.2025 |
| | | வெள்ளி | 09.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.12.2025 |
| | | வெள்ளி | 16.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.01.2026 |
| | | வெள்ளி | 23.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.01.2026 |
| | | வெள்ளி | 30.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.01.2026 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 06.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.01.2026 |
| | | வெள்ளி | 13.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.01.2026 |
| | | வெள்ளி | 20.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.02.2026 |
| | | வெள்ளி | 27.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.02.2026 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.